சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | தமிழ்மாறன் |
| தந்தை பெயர் | : | பிச்சைமுத்து |
| கிராமம் | : | கன்னந்தக்குடி |
| தாலுக்கா | : | ஒரத்தநாடு |
| தொழில் | : | துணை காவல் கண்காணிப்பாளர் |
| வயது | : | 57 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நன்னிலம் உட்கோட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2025 ஆம் தேதி வலங்கைமான் காவல் நிலைய குற்ற

எண்.03/2025 -ல் சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 118(1), 351(3) of BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் வலங்கைமான் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.சுப்பிரமணியன் என்பவர் வழக்கு பதிவு செய்து வைத்திருந்த வழக்கினை திருவாரூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களின் செயல் முறை ஆணை C.No.01/SJ&HR/TVR/2025, dated, 04.01.2025-ன் கீழ் உத்தரவிட்டிருந்தார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ-22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான விடையல் கருப்பூர் மெயின் ரோடு சென்று 04.01.2025 ஆம் தேதி மதியம் 2.30 மணியளவில்அ.சா-4 விஜயபாலன் மற்றும் அ.சா-5 கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ-23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ-24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் அ.சா-1 அபிக்கண்ணன், அ.சா-2 சஞ்சை, அ.சா-3 சந்தோஷ், அ.சா-4 விஜயபாலன் மற்றும் அ.சா- 5 கருணாகரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் வலங்கைமான் காவல் சரகம் ஆண்டான் கோவில் கேஸ் குடவுன் அருகில் இந்த வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரிகள் 1ம் எதிரி ஹரிஹரன், 3ம் எதிரி சிவராம், 4ம் எதிரி சூரியபிரகாஷ் ஆகியோர்களை அ.சா-6 சங்கர் மற்றும் அ.சா-7 கண்ணதாசன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்தேன். அப்போது 1ம் எதிரி ஹரிஹரன் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட 5 கட்டைகளை கருப்பூர் சட்ரஷ் அருகில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் மேற்படி கட்டைகளை ஆஜர் செய்வதாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்க தக்க பகுதியான

மேற்சொன்ன விபரங்கள் அ.சா.ஆ-25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பேரில் மேற்படி 1ம் எதிரியையும், சாட்சிகளையும் அழைத்துக்கொண்டு கருப்பூர் சட்ரஷ் அருகில் உள்ள முட்புதர் அருகே சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த சா.பொ-1 ஆன 5 கருவை கட்டைகளை மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-26** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் 1ம் எதிரி ஹரிஹரன், 3ம் எதிரி சிவராம், 4ம் எதிரி சூரியபிரகாஷ் ஆகியோர்களையும் மற்றும் கைப்பற்றிய வழக்கு தடையங்களை நிலையம் கொண்டுவந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய தடய பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-27** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 04.01.2025 ஆம் தேதி அன்று அ.சா-6 சங்கர் மற்றும் அ.சா-7 கண்ணதாசன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.01.2025 ஆம் தேதி அ.சா-1 அபிக்கண்ணன், அ.சா-2 சஞ்சை, அ.சா-3 சந்தோஷ் ஆகியோர்களை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் சாட்சிகள் குமரன், ராமச்சந்திரன், சக்திவேல், ராகுல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்மந்தப்பட்டுள்ள 1ம் எதிரி ஹரிஹரன், 2ம் எதிரி முகேஷ், 3ம் எதிரி சிவராம், 4ம் எதிரி சூரியபிரகாஷ், 5ம் எதிரி திவாகர் மற்றும் அ.சா-1 அபிக்கண்ணன், அ.சா-2 சஞ்சை ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ்கள் வேண்டி வலங்கைமான் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். 31.01.2025 ஆம் தேதி சாதிசான்றிதழ்கள் பெற்றேன். சாட்சிகளுக்கும் எதிரிகளுக்கும் சாதி சான்றிதழ் வழங்கிய வலங்கைமான் வட்டாட்சியர் அ.சா-8 ஸ்ரீராம் என்பவரை 11.02.2025 ஆம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் கிராம நிர்வாக அலுவலர் விடையல் கருப்பூர் கற்பகவள்ளி மற்றும் வலங்கைமான் வருவாய் ஆய்வாளர் ஏஞ்சல்ஸ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா-1 அபிக்கண்ணன் மற்றும் அ.சா-

2 சஞ்சை ஆகியோர்களுக்கு முதல் உதவி சிகிச்சை செய்த வலங்கைமான் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி அ.சா-9 சித்ரா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி 2 சாட்சிகளுக்கும் சிகிச்சை செய்து சான்று வழங்கிய கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி அ.சா-10 ராஜ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி இரண்டு சாட்சிகளுக்கும் உரிய விபத்து பதிவேடு மற்றும் மேற்படி சாட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கியதை பெற்றேன். அந்த சான்றிதழ்கள் ஏற்கனவே அ.சா.ஆ-16 முதல் 19 வரையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அ.சா-11 சுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் 2ம் எதிரி முகேஷ் மற்றும் 5ம் எதிரி திவாகர் ஆகியோர்கள் நீதிமன்றத்தில் சரணடைந்ததால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கின் அனைத்து புலன் விசாரணையும் முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 126(2), 296(b), 118(1), 351(3) of BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் 11.02.2025 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.02 18:24:34 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு ) வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.